**செய்தி வெளியீடு**

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக நம் மாநிலத்தில் கள்ளச்சாராய நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், தமிழக அரசு, மக்களின் உடல்நலத்தை பாதுகாக்கும் பொருட்டு தொடர்ந்து, மது மற்றும் கள்ளச்சாராயம் அருந்துவதால் ஏற்படும் தீங்குகள் மற்றும் அபாயங்களை மக்களுக்கு விளக்கும் வகையில் மாநிலம் தழுவிய விழிப்புணர்வு முகாம் நடத்தி வருகிறது.

முதன் முதலில் கடந்த 2003–2004–ஆம் ஆண்டு மேற்படி விழிப்புணர்வு முகாம் அரசால் தொடங்கப்பட்டது. இடையில் 2005–2006 முதல் 2009–2010–ஆம் ஆண்டு வரையில் நிறுத்தப்பட்டது. மீண்டும் 2011–2012–ஆம் ஆண்டில் தற்போதைய அரசினால் விழிப்புணர்வு முகாம் நடத்திட மேற்படி நிதியாண்டிற்கு ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நடப்பு நிதி ஆண்டிற்கும் (2012–2013) விழிப்புணர்வு முகாம் நடத்த ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு அரசால் செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் இந்த விழிப்புணர்வு முகாம் நடத்திட மேற்காணும் ரூ.1 கோடியில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் இரண்டு இலட்சமும், மாநில அளவில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறைக்கு ரூ.36 இலட்சமும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களால் இது குறித்து கருத்தரங்குகள், தெரு நாடகங்கள், குறும்படங்கள், துண்டு பிரசுரங்கள், பொது இடங்களில் விளம்பரம், நையாண்டி மேளம், கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டி, மனித சங்கிலி ஆகியவற்றின் மூலமும், மக்களிடம் கள்ளச்சாராய விழிப்புணர்வு ஏற்படுத்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்களின் மேலே கண்ட அரசு ஆணையின்படி, மதுவினால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கம், மாநில அளவில் சென்னையில் 15.04.2013 திங்கட்கிழமை அன்று

நடைபெற உள்ளது. சென்னை மெரினா கடற்கரை காந்திசிலை அருகில் 15.04.2013 அன்று காலை 9.00 மணி அளவில், மின்சாரம் , மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.நத்தம் ஆர்.விஸ்வநாதன், அவர்கள் கொடியசைத்து பேரணியை துவக்கி வைக்கிறார், வணக்கத்துக்குரிய சென்னை மாநகர மேயர் திரு.சைதை சா.துரைசாமி அவர்கள் பேரணி விழிப்புணர்வு ஜோதியை ஏற்றி வைக்கிறார். அன்று பிற்பகல் 3.00 மணி அளவில் மதுவினால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் , சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி அரங்கத்தில் நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கத்தில் மாண்புமிகு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.நத்தம் ஆர்.விஸ்வநாதன், அவர்கள் விழாபேருரையாற்றுகிறார், மரியாதைக்குரிய சென்னை மநாகர மேயர் வாழ்த்துரை வழங்குகிறார். அரசின் உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் தலைமையுரையாற்றுகிறார், காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), சிறப்புரையாற்றி சான்றிதழ் வழங்குகிறார், சென்னை மாநகர காவல் ஆணையர் துண்டு பிரசுரங்கள் வெளியிடுகிறார், தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் கலைக்குழுவிற்கு நினைவுப் பரிசு வழங்குகிறார், அமலாக்கப்பிரிவு கூடுதல் காவல் துறை இயக்குநர் வரவேற்புரையாற்றுகிறார் மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையர் அவர்கள் நன்றியுரையாற்றுகிறார். மேற்கூறிய பேரணி மற்றும் கருத்தரங்கத்தில் பள்ளி–கல்லூரி மாணவ மாணவியர்கள், மகளிர் சுயஉதவிக்குழுவினர் , அமலாக்கப்பிரிவு காவல்துறை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**